
# கருஞ்சட்டை நாயகரே! கைகூப்பி வணங்குகின்றோம்!



பேரியக்கம் கண்டவரே!
பெரியார்க்கும் பெரியாரே!
ஆரியத்தின் அடிவேரை
அறுத்தெறிந்த கூர்வாளே!
பூர்வஜென்ம விதிப்பயனைப்
பொய்புரட்டுப் பழங்கதையைச்
சூரியத்தீக் கோளமெனச்
சுட்டெரித்த செஞ்சுடரே!

சிக்கனத்தை விதைத்தவரே!
சீர்திருத்தம் படைத்தவரே!
கொக்கரித்த வைதீகக்
கோட்டைகளை உடைத்தவரே!
எக்கணத்தும் வருணத்தை
எதிர்த்தவரே! எவ்விதத்தும்
மக்களுக்குத் தீமைதந்த
மடமைகளைத் தகர்த்தவரே!

அண்டபகி ரண்டத்தை
ஆண்டவனார் லோகத்தை,
கண்துயிலும் கோலத்தைக்
கடவுள்வண்ட வாளத்தைக்
கொண்டுவந்து நேர்நிறுத்திக்
குத்தீட்டிக் கேள்விகளால்
துண்டுபல துண்டாக்கித்
தோலுரித்துப் போட்டவரே!

மூவர்களை, முனிவர்களை,
முப்பத்து முக்கோடித்
தேவர்களை, தேவியரைத்
தெய்வீகப் புருஷர்களை
ஏவிவிட்ட புராணத்தை,
இதிகாசக் குப்பைகளைத்
தீவிறகு மூட்டிவைத்துத்
தெருவில்போட்டு எரித்தவரே!

மூத்திரப்பை பழுதாகி
முதுகுவடம் பாழாகி
நீத்துஉயிரை விடும்நேரம்
நெருங்கிவந்தும் சோராமல்,
சூத்திரனைப் பஞ்சமனைச்
சுடுசொல்லால் அவமதித்த
சாத்திரத்தை இறுதிவரை
சவுக்கால் அடித்தவரே!

" ஓர்குலத்துக் கொருநீதி"
உரைத்ததனால் வரநேர்ந்த
பேரிழப்பைத் தடுத்தவரே!
பெருமுயற்சி எடுத்தவரே!
கேரளத்தில் வைக்கத்தில்
கீழ்ச்சாதி எனப்பட்டோர்
ஊர்நடுவில் நடப்பதற்கும்
உரிமைபெற்றுக் கொடுத்தவரே!

சரஞ்சரமாய் தொடர்கணைகள்!
சனாதனத்தின் விமர்சனங்கள்!
வருஞ்சுமைகள் என்றறிந்தும்
வரலாற்றைப் புதுப்பிக்க
நெருஞ்சிமுள்ளில் நடந்தவரே!
நெருப்பாற்றைக் கடந்தவரே!

கருஞ்சட்டை நாயகரே!
காலத்தின் தூதுவரே!

பத்துத் தலைமுறைக்குப்
பணம்,சொத்துச் சுகமிருந்தும்
மெத்தைமலர்ப் பஞ்சணையை
மேல்துண்டு போல்உதறி
சத்தியத்தை நிலைநிறுத்தும்
சமதர்மப் போர்க்களத்தில்
எத்தனைவெஞ் சிறைவரினும்
ஏற்றுக் கிடந்தவரே!

பெண்ணுக்கு முன்னுரிமை!
பேச்சுரிமை! எழுத்துரிமை!
கண்முன் அரங்கேறக்
களங்கள் அமைத்தவரே!
கைம்பெண் மறுமணமும்
காதல் திருமணமும்
பைம்பொன் பரிசுபெறப்
பாதை வகுத்தவரே!

படுக்கையறைப் பதுமைகளாய்
பயன்பாட்டுக் கருவிகளாய்
அடுக்களையின் அடிமைகளாய்
அடங்கிக் கிடந்தபெண்கள்
தடுப்பணைகள் அனைத்தையுமே
தவிடுபொடி யாக்கிவிட்டு
மிடுக்குநடை போட்டுவர
விடுதலைபெற் றளித்தவரே!

தடியசைய உடலசையத்
தவழ்காற்றில் வெண்தாடி
முடியசைய நாடெங்கும்
முழக்கமிட்ட அரிமாவே!
கொடியசையத் தேர்மீது
கொலுவிருக்கும் வேந்தனைப்போல்
நெடியமக்கள் ஊர்வலத்தில்
நீந்திவந்த பேரழகே!

ஊழ்வினையை நம்பியவர்
உறக்கம் கலைத்தவரே!
வீழாமல் நடக்க, விடி
வெள்ளியாய் முளைத்தவரே!
தாழாமல் எந்தமிழர்
தலைநிமிரக் களப்போரில்
வாழ்நாள் முழுவதையும்
வழங்கிவிட்டுப் போனவரே!

வள்ளுவனார் எழுத்துக்கும்
வள்ளலார் கருத்துக்கும்
கொள்கை உருக்கொடுத்த
கோமானே! குலப்பகைவர்
எள்ளல் இழிவுரையை
எட்டி உதைத்தவரே!
அள்ளிக் கயமைகளை
ஆழப் புதைத்தவரே!

நாயினுக்கும் கீழாக
நமைப்பேதப் படுத்திவிட்டு
வாயடித்து, நம்தமிழர்
வயிற்றிலும் அடித்துவிட்டுப்
பாய்விரித்த "மனுதர்மம்"
பகுத்தறிவுத் தடியெடுத்து
நீயடித்த அடியால்தான்
நிர்மூலம் ஆனதையா!

விஞ்சும்இட ஒதுக்கீடு!
வேல்விழியார் சொத்துரிமை!
அஞ்சாமல் கொண்டுவந்த
"அர்ச்சகர் சட்டம்" வரை
வஞ்சகத்தை வென்று, செயல்
வடிவம் கொடுத்து, உங்கள்
நெஞ்சில் இருந்தமுள்ளை
நீக்கியவர் "கலைஞர்"அன்றோ!

ஆதவன்போல் ஒளிவீசி
ஐயா, நீ போட்டுவைத்த
பாதையிலே இலட்சியப்
பயணம் நடத்திவரும்
மேதகு முதல்வர்! "முத்து
வேல்கருணா நிதிஸ்டாலின்"
சாதனையின் நல்லாட்சிச்
சரித்திரம் தொடருதையா!

ஆலயத்துக் குள்ளேயே
அனுமதிக்கப் படாதவர்கள்
கோலமிகு அர்ச்சகராய்
கொண்டாடப் படும்அந்தக்
காலம்இதோ வந்தது!உங்கள்
கனவுநன வானதையா!
ஞாலம்உங்கள் திருப்பெயரை
நன்றிசொல்லி வணங்கும்ஐயா!

சாயாத இமயமெனச்
சரியாத வானமென,
ஆயிரம் பிரளயத்தும்
அழியாத கல்வெட்டாய்
தாயகத்தும் அயலகத்தும்
தந்தையே! உமதுபுகழ்
தூயமக்கள் உள்ளத்தில்
சுடர்வீசித் திகழும்ஐயா!



... கவிச்சுடர். கவிதைப்பித்தன்



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வீரப்பன் சத்திரம் அண்ணா மன்றத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அண்ணன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினா் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக பொருளாளர் .ப.க.பழனிசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

# செப்டம்பர் 17 கரூரில் கழக முப்பெரும் விழா!

### மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, செப்.17 - திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இன்று (செப்டம்பர் 17-ஆம் தேதி) மாலை 4 மணி அளவில் கரூர் மாவட்டம் கரூர் பைபாஸ் சாலையில் கோடங்கிப்பட்டி மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அனைத்து நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண் ண்டர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

## சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

# சேலம் மத்திய மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், செப் 17 - சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 17ஆம் நாள். தமிழ் இனம், தமிழ் மொழி, சுயமரியாதை, பகுத்தறிவு, மகளிர் உரிமை, மூட நம்பிக்கை ஒழிப்பு என தமிழர்களை தட்டி எழுப்பி தன் மானத்தோடு வாழ வழி காட்டியவர் தந்தை பெரியார். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் நமக்கெல்லாம் தமிழ் உணர்வை ஊட்டிய நாள் தமிழனுக்கு சூடு பிறந்த நாள். தந்தை பெரியாரின் 147வது பிறந்த நாளில் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச் சிலைக்கு இன்று (செப்டம்பர் - 17 புதன்கிழமை) காலை 08.30 மணிக்கு மலர்மாலை அணிவித்து, "சமூக நீதிநாள் உறுதிமொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில்சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்டக் கழக,ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள்மற்றும் நிர்வாகிகள், உள்ளட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாமல் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக பங்கேற்க முடிவு!

### மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்! கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, செப். 17 – புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 13.09.2025 சனிக்கிழமை மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் புதுக் கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் கீரை தமிழ்ச்செல்வன் அவைக் கூடத்தில் நடைபெற்றது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அனைவரையும் வரவேற்று ஆலோ சனைகள் வழங்கி சிறப்புரையாற்றி னார்.

கூட்டத்திற்கு டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கவிச்சுடர் கவிதைப் பித்தன், கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், சுப.சரவணன், செ. அசோக்பாண்டியன் கே.ஆர்.என். போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் கந்தர் வக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் மணவளவன், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, ஒன்றிய கழக செயலாளர் கள் கே.எஸ். சந்திரன், தவ.பாஞ்சாலன், மு.க. ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மு.பி.ம. சத்திய சீலன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, என். சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ.இளங்கும ரன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், சி.சண்முகம், வை. விஜயக் குமார், பி. அண்ணாத்துரை, அ.ரெத்தி னம், எம்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, செந்தாமரை பாலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் பெ. ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

கூட்டத்தில் மண், மொழி, மானம் காப்போம் என்கிற முழக்கத்தோடு ஓரணியில் தமிழ்நாடு என்கிற முனைப்பின் மூலம் மீண்டும் வீடுகள் தோறும் சென்று கழக அரசின் சாதனைகளை சேர்ப்பது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

செப்டம்பர் 17 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்பது என தீர்மானிக்கப்படுகிறது

## திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பெருமளவில் பங்கேற்பீர்!

### மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!



கரூர், செப். 17 – கரூரில் செப்டம்பர் 17 இன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக சிறப்பாக கொண்டாடி வருகிறது.

விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது. பாவேந்தர் விருது. பேராசிரியர் விருது. கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 இன்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் சீரிய ஏற்பாட்டில் கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது.

முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் பங்கேற்று, பொதுமக்களும் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தந்தை பெரியார் பிறந்த நாள் !

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, செப். 17 - திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி, திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில், திருச்சி தஞ்சை சாலை காட்டூரில் அமைந்துள்ள "தந்தை பெரியார்" அவர்களின் திருவுருவச் சிலைக்கு இன்று (17.09.2025 - புதன் கிழமை) காலை 9 மணிக்கு கழக நிர்வாகி களுடன் சென்று மாலை அணிவித்து மரியாதையை செலுத்த உள்ளோம் .

இந்தநிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண் டர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்கள், சென்னை கலைவாணர் அரங்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், "அன்புக்கரங்கள்" திட்டத்தை துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் ஆகியோர் "அன்புக்கரங்கள்" திட்டத்தை துவக்கி வைத்து, அன்புக்கரங்கள் திட்ட பயனாளிகள் 100 குழந்தைகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள். உடன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் நகரமன்ற தலைவர் பரிதா நவாப் உள்ளிட்ட பலர் உள்ளனர்.